## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF ASSISTANT SESSION'S JUDGE , SIVAGANGAI

| | | |
|---|---|---|
| Case Number | : | S.C.No.113/2021 |
| Deposition Of Witness for | : | PW.10 |
| Name | : | **திரு. கோடீஸ்வரன்** |
| Father Name | : | திரு. குருநாதன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25th July 2025.**

(எதிரி ஆஜர். It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை :

நான் தற்போது பாதுகாப்பு மற்றும் குற்ற புலனாய்வு துறை சென்னை சார்பு ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 11.09.2019 ம் ஆண்டு 21.15 மணிக்கு

திருப்பத்தூர் நகர் நிலைய சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று திருப்பத்தூர் நகர் காவல் நிலையத்தில்இருந்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த பாண்டிசெல்வி என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றேன் அங்கு அவருடன் சிகிச்சையில் இருந்த பாண்டிசெல்வியின் கணவர் பெயர் காளிதாஸ் வயது 53/2019 , இசைவேளாளர் தெரு, திருப்பத்தூர் என்பரும் சிகிச்சையில் இருந்தார். பாண்டிசெல்வியிடம் பெற்ற புகார் வாக்குமூலத்தின் அடிப்படையில் காவல் நிலையம் வந்து புகாரின் தன்மைக்கேற்ப 11.09.2019 ம் ஆண்டு 22.15 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அச்சு படிவம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6. ஆய்வாளர் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து எனக்கு கிடைத்ததாக சொல்லும் தகவல் யார் கொடுத்தது என்றால் அரசு மருத்துவமனை அலுவலர்கள் கொடுத்தார்கள். மேற்படி தகவலின் அடிப்படையில் அரசு மருத்துவமனைக்கு நான் சென்றேனா அல்லது எனக்கு கீழே பணி செய்யும் வேறு காவலர்கள் சென்றார்களா என்றால் நான் தான் சென்றேன். மேற்படி மருத்துவமனைக்கு சென்ற போது புகார்தாரர் பாண்டிசெல்வியும் அவரது கணவர் காளிதாசும் சுய நினைவோடு இருந்தார்களா என்றால் பாண்டி செல்வி சுயநினைவோடு இருந்தார். பாண்டி செல்வியின் கணவர் பேச முடியாத நிலையில் இருந்தார். என்னிடம் கொடக்கப்பட்ட புகார் வாக்குமூலத்தை பாண்டி செல்வி எழுத்து மூலம் எழுதி கொடுத்தாரா அல்லது வாய் மொழியாக கொடுத்தாரா என்றால் வாய் மொழியாக கொடுத்தார். மேற்படி வாய்மொழியாக கொடுத்த புகாரை நான் தான் எழுதினேன். மேற்படி சிகிச்சையில் இருந்த புகார்தாரர் மற்றும் அவரது கணவருக்கு என்ன என்ன காயங்கள் இருந்தது என குறிப்பு எதுவும் எடுத்துக்கொண்டேனா என்றால் முதல் தகவல் அறிக்கையில் சொல்லியுள்ளேன் தனியாக எதுவும் குறிப்பு எடுக்கவில்லை. பாண்டி செல்வியிடம் நான் வாய்மொழி புகார் வாக்குமூலம் பெற்ற போது அவருடன் அவருடைய உறவினரோ ஊர்காரர்களோ இருந்தார்களா என்றால் இல்லை. வாய் மொழி புகாரில் சொல்லப்பட்டவாரு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் புகாரை சரிவர விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. திருப்பத்தூர் நகர் காவல்

நிலையத்தில் இருந்து  நீதிமன்றம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 1.5 கி.மீ தூரம் இருக்கும். நான் பதிவு செய்த முதல் தகவல் அறக்கையை அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு அனுப்பிவிட்டேன் என்றால் சரிதான்.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.07.25 18:17:39 +0530